# போர் இடைநிறுத்தம்; பொதுமக்கள் கவனிக்க வேண்டியவை!

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 26 இதழ் 340
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 10-1-1995

(யாழ்ப்பாணம்)
தமிழீழ விடுதலைப் புலிகளாகிய எமக்கும், சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்பட்ட போர் நிறுத்தப் பிரகடன உடன்படிக்கையின்படி கடந்த ஏழாம் திகதி நள்ளிரவுடன் தாக்குதல் தவிர்ப்பு நிலை அமுல் செய்யப்பட்டுள்ளதையும்: அதற்கான நடைமுறை விதிகளை

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகள்-படையினர் விரைவில் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)
விடுதலைப் புலிகளின் மாவட்ட தளபதிகளுக்கும் அரசபடையினரின் பிராந்திய தளபதிகளுக்கும் இடையில் விரைவில் ஒரு சந்திப்பு இடம் பெறவுள்ளதாக புலிகள் தரப்பு செய்திகள் தெரிவித்துள்ளன.

(4-ம பக்கம் பார்க்க)

# வடக்கு-கிழக்கில் மீன்பிடி தடை சட்டத்தை உடன் நீக்க முடிவு!

## அரசு நேற்று அறிவிப்பு!!

[கொழும்பு]
வடக்கு–கிழக்குப் பகுதிகளில் அமுலில் இருந்துவரும் மீன்பிடி தடை சட்டத்தை உடனடியாக நீக்குவதற்கு அரசு முடிவு செய்துள்ளது, இதன்படி காலை ஐந்து மணி முதல் மாலை ஐந்து மணிவரை வடக்கு கிழக்கு பகுதிகளில் மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்படுவார்கள் கடலில் இரண்டு மைல் சுற்றளவில் இவர்கள் மீன்பிடிக்க முடியும் என அரசு நேற்று அறிவித்தது.

(4ம் பக்கம் பார்க்க)

## கடற்றொழிலாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)
மண்டைதீவு, அரியாலை அராலி பொன்னாலைப் பிரதேசக் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் முக்கியமாக தாக்குதல் நடவடிக்கை

(4ம் பக்கம் பார்க்க)

## மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் இராணுவமாநாட்டில ஆராய்வு

(கொழும்பு)
விடுதலைப் புலிகளுக்கும், அரசுத் துருப்புக்களுக்குமிடையில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் பற்றி நேற்று கொழும்பில் இராணுவ உயர் அதிகாரிகள் மத்தியில் உயர்மட்ட மாநாடு நடைபெற்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மோதல தவிர்ப்புஒப்பந்தம் மீறப்படாதது குறித்து மாநாட்டில் கலந்துகொண்ட இராணுவ அதிகாரிகள் மகிழ்ச்சியைத தெரிவித்துக்கொண்டனராம்.

வடக்கு-கிழக்கில் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் மீறப்படவில்லை என மேற்படி பகுதிகளில் உள்ள பிராந்தியத் தளபதிகள் அறிவித்துள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. க-இ

## புலிகளின பெயர்கள் அரசுக்கு அனுப்பிவைப்பு

[யாழ்ப்பாணம்)
மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை கண்காணிககும் குழுக்களில் இடம் பெறும் விடுதலைப்புலிகளின் பெயர் விபரங்கள் அரசுக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசு தரப்பில் இடம்பெற வேண்டியவர்களின் பெயர் விபரங்களும் விரைவில் வெளிவரும் என எதிர்பார்க்கப் படுவதாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(2-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று செவ்வாய்க் கிழமை வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப்புலிகள் அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்திலுள்ள சகல திணைக்களத் தலைவர்களுக்குமான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று மு. ப. 10 மணிக்கு சுண்டிக்குளியிலுள்ள தமிழீழ அரசியல்துறை நடுவப் பணியகக் கார்யாலயத்தில் நடைபெறும் இதில் சகல திணைக்களத் தலைவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## கண்காணிப்புக்குழு விபரம் வர்த்தமானியில் வெளியாகும்

(கொழும்பு)
விடுதலைப் புலிகளுக்கும், அரசுப் படையினருக்கும் இடையில் நடைமுறைப்படுத்தப் படும் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தைக் கண்காணிக்கும் குழுவில் இடம் பெறுவோர் பற்றிய விபரங்கள் வர்த்தமானி அறிவித்தல் மூலம் இன்று வெளியிடப்படும் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆறு மாவட்டங்களில் செயற்படும் இக்குழுக்களின் ஐந்து அங்கத்தவர்களின் விபரங்கள் வெளியிடப்படும்.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய பகுதிகளில் இக்குழுக்கள் செயற்படும்.

கண்காணிப்பு குழுவில் இடம்பெறுவோர் பற்றிய விபரம், அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினால் அப்பகுதி இராணுவ அதிகாரிகளின் பரிந்துரையுடன் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

(2ம் பக்கம் பார்க்க)

## விவசாய ஆசிரியர் பரீட்சை

[யாழ்ப்பாணம்)
விவசாயப் பயிலுநர் ஆசிரியர்களையும் விவசாய டிப்புளோமா ஆசிரியர்களையும் ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை (1995) எதிர்வரும் 14ஆந் திகதி யா/வேம்படி பெண்கள் உயர்நிலைப் பாடசாலையில் நடைபெறும். இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் 11ஆந் திகதி உரியர்களுக்கு கிடைக்குமெனப் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். [இ]

## வடக்கு கிழக்கில் தொடர்ந்தும் அமைதி

(கொழும்பு)
விடுதலைப் புலிகளுக்கும். அரசுப் படையினருக்குமிடையில்கடைப்பிடிக்கப்பட்டுவரும் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் எதுவித இடையூறுமின்றித் தொடர்ந்து அமுல்படுத்தப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் பூரண அமைதி நிலவுவதாகவும், கிழக்குப் பகுதிகளில் படையினர் மற்றும் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்டுவந்த தேடுதல் மற்றும் சுற்றிவளைப்புக்களும் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. க-இ

## வடபகுதிக்கு தொலைபேசி தொடர்புசேவை வழங்க முடிவு

(கொழும்பு)
வடபகுதிக்குத தொலைபேசி தொடர்புச் சேவை வழங்கப் படவிருக்கிறது. இதற்கான நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா ரெலிகோம் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

இதன் முன்னேற்பாட்டு நடவடிக்கையாக தொலைபேசி வயர்களை இணைக்கும் முயற்சியில் ரெலிகோம் நிறுவன தொழில் நுட்பவியலாளர்கள் நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றனர்.

பொதுசனஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் விசேடபணிப்புரைக்கமையவே இந்நடவடிக்கையில் மேற்படி நிறுவனத்தினர்ஈடுபட்டுவருதாகத் தெரிவிக்கப்பட்டது. க இ

சுவிஸில் தஞ்சம் கோரிய

# 5000 தமிழரின் அகதிகள்

## அந்தஸ்து விண்ணப்பம் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

சுவிஸ் நாட்டில் அகதிகள் அந்தஸ்துகோரி விண்ணப்பம் செய்திருந்த இலங்கைத்தமிழ் அகதிகளில் 5000 பேர் வரையிலானவர்களின் விண்ணப்பங்கள் இதுவரை சுவிஸ் அரசினல் நிராகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டவர்களுக்கு நாட்டை விட்டு வெளியேறுமாறு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அநேகமானோர் சுவிஸ் நாட்டைவிட்டு வேறு நாடுகளுக்கு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

சுவிஸ் அரசினல் அண்மையில் அங்கிருந்து இலங்கைக்குத் பலவந்தமாக திருப்பி அனுப்பப்பட்ட யாழ்ப்பாணம் ஓடை ஒழுங்கையைச் சேர்ந்த செல்வன பரராசசிங்கம் இந்திரசிறி தனக்கு சுவிஸ் நாட்டில் நேர்ந்தவைகள் பற்றி விபரிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்: இலங்கையில் நடைபெறும் அசம்பாவிதங்கள் காரணமாக 1984ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சுவிஸ் நாட்டிற்குச் சென்றிருந்தேன். ஆரம்பத்தில் இந் நாட்டு அதிகாரிகளால் அகதி முகாம் ஒன்றில் தங்கவைக்கப்பட்டிருந்தேன், இங்கு என் போன்ற இலங்கைத் தமிழ் இளைஞர்கள் தங்க வைக்கபபட்டிருந்தார்கள். இந்த அகதி முகாமில் எமக்கு வழங்கப்பட்டு வந்த பணத்தைக் கொண்டு எமது உணவு மற்றும் தேவைகளை சமாளித்து வந்தோம்.

சில நாட்களுக்குப் பின் அந் நாட்டு அரசுக்கு அகதிகள் அந்தஸ்துக் கோரி விண்ணப்பித்திருந்தேன். இந்தவேளையில் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதுடன் அகதி முகாமுக்கு வெளியில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டு காட் ஒன்று வழங்கப்பட்டது. இந்தக் காட் வைத்திருப்பவர்கள் சுவிஸ் நாட்டில் வேலை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார்கள், இந்தக்காட்டைப் பெற்றுக்கொண்ட நான் வேலை ஒன்று தேடுவதற்கு ஆரம்பித்தேன். இந்த வகையான பலவித கஷ்டங்களை இந்நாட்டில் எதிர்நோக்க வேண்டியிருந்தது.

இலங்கையைச் சேர்ந்த தமிழர்கள் சுமார் 35,000 பேர் வரை இந்நாட்டில் உள்ளனர். இவர்களுக்கு அகதிகள் அந்தஸ்து இதுவரை வழங்கப்படவில்லை. விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலருக்கே அகதிகள் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. சுவிஸ் அரசு எமது மக்கள் மேல் பலவகையான அழுத்தங்களைக் கொடுத்து வருகிறது. சுவிஸைவிட்டு அனுப்புவதற்கான ஏற்பாடுகளையும் அடிக்கடி மேற்கொண்டு வருவது வழக்கம். இந்த வகையான நெருக்கடிகளுக்கு எதிராக எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக எமது மக்கள் பலவகையான கண்டனக் கூட்டங்களை நடத்துவதும் கண்டன மகஜர்கள் கையளித்து வருவதுமுண்டு.

தமிழர்களை திருப்பி அனுப்பும் விடயத்தில் மிகக் கண்டிப்பாகவே செயல்பட்டு வருகிறது இலங்கைத் தமிழ் அகதிகளின் சார்பில் பலவகையான அமைப்புக்கள் இவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பக் கூடாது எனக் கண்டனக்குரல் எழுப்பி வருகின்றன. இக்காரணங்களால் அனேகர் இந் நாட்டைவிட்டு வேறு நாடுகளுக்கு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

நான் வேலை பார்த்துவந்த ஹோட்டலில் நிறப்பிரச்னை காரணமாக ஏற்பட்ட ஒரு தகராறில் அந்த ஹோட்டலிலிருந்து நான் வெளியேற்றப்பட்டேன். எனது நிலைப்பாட்டை எடுத்து விளக்குவதற்குக்கூட சுவிஸ் அரச அதிகாரிகள் எனக்கு சந்தர்ப்பம் வழங்காது என்னை இலங்கைக்குத் திருப்பி அனுப்பியது. நான் தங்கியிருந்த அறையிலிருந்து எதுவிதமான பொருட்களைக் கூட என்னுடன் எடுத்து வருவதற்கு அனுமதிககாது என்னை உடனடியாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பிவிட்டார்கள் என்றும் தெரிவித்தார்.

162-சி

---

### வரி விளம்பரம்

#### விற்பனைக்கு

உங்களுக்கு தேவையான இதரை, கதலி வாழைக்குட்டிகள் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம். ராஜா மில் தாவடி. சி-1367

#### விற்பனைக்குண்டு

தக்காளிக் கன்று விற்பனைக்கு உண்டு. Taste Line Industries (Pvt) Ltd, 14, Seenier Lane, Jaffna. (A-4660)

#### நீங்களும் நாவல் எழுதலாம்

250 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை தனது 'அக்கரைச்சீமை'யில் நாவலுக்கு எழுதிய முன்னுரையை வாசித்துப் பாருங்கள். நீங்களும் நாவல் எழுதலாம். (சி-1353)

#### மலிவு விற்பனை

''ஹரி ஓம்'' பொன்னாலையில் தேர்ப்பவனி. மில்க்வைற் உற்பத்திகளின் காட்சியும், விற்பனையும், ரூ. 25/-க்கு வாங்குபவர்கட்கு ஒரு மரக்கன்று அன்பளிப்பு. சேர்ப்பிக்கும் மில்க்வைற் மேலுறைகள் / வெற்றுப்பக்கற்றுகளுக்கும் ஏற்ற அன்பளிப்புகள். மில்க்வைற். (ஏ-4659)

---

### துணிகள் திருட்டு

(பளை)

பளைப்பகுதியிலுள்ள சலவைத் தொழில் கடை ஒன்றிலிருந்து சுமார் மூவாயிரம் ரூபா பெறுமதியான துணிகள் களவாடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக காவல் துறையினக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சந்திரன் என்பவரின் கடையிலேயே திருட்டுப்போயுள்ளது. -156

### விண்ணப்பங்கள் ஏற்கப்படவில்லை

(மானிப்பாய்)

1954ம் ஆண்டிற்குப்பின்னர் பிறந்தவர்களுக்கான பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பங்கள் யாழ் பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் இதுவரை ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

இவ்வாண்டில் பிறந்தவர்களுக்கு எழுதி வழங்கப்படும் இருபக்கப்படிவங்கள் கொழும்பிலிருந்து வந்துசேராமையே இதற்கு காரணமென்று தெரிவிக்கப்படுகிறது. 71

---

## 542 வீதி விளக்குகள்

### கடந்த வருடம் பொருத்தப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்றத்தால் யாழ். நகரில் ஆரம்பிக்கப்பட்டுவரும் வீதி விளக்குத் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதிகளில் 542 விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதாக இதன் பொறுப்பாளர் மாநகராட்சிமன்ற மின்சாரபொறியியலாளர் திரு நவரத்தினராசா தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்: யாழ். நகரில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் இந்த வேளையில் பொது மக்களின் வசதி கருதி இந்த வீதி விளக்குகள் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இன்று இந்த வீதி விளக்குகள் பாவனையில் இருப்பதால் யாழ். நகரில் இரவு நேர விபத்துக்கள் பெருமளவு குறைந்துள்ளது. அத்துடன் பொதுமக்களும் இரவு நேரங்களில் சிரமமின்றி நடமாடக்கூடியதாகவும் உள்ளது.

சில பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கும் வீதி விளக்குகள் இனம் தெரியாத விசமிகளால் சேதமாக்கப்பட்டும் அகற்றப்பட்டும் வருவதாகவும் அவர் கவலை தெரிவித்தார். - 162

---

## தேவை

கணக்கியல், நிர்வாகம் ஆகிய துறைகளில் பயிற்சி பெறுவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமை :

★ க. பொ. த. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியும், க. பொ. த. சாதாரண தரத்தில் ஆங்கிலம், தமிழ், கணிதம் ஆகிய பாடங்களில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

வயது :

★ 25 வயதிற்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

விண்ணப்பங்களுக்கான முடிவு திகதி: 14-1-95

விளம்பர இல : ஏ-4655,
மே/பா ஈழநாடு லிமிட்,
த. பெ. எண் 49,
யாழ்ப்பாணம்.

(ஏ-4655)

---

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கலைப்பீட சகல வருட மாணவர்களுக்கும் :

கலைப்பீட சகல வருட மாணவர்களுக்குமான விரிவுரைகள் யாவும் 17-01-1995 செவ்வாய்க்கிழமை காலை தொடங்கும் என அறியத்தருகின்றேன். விடுதி மாணவர்கள் 16-01-95 அன்று மாலை தங்கள் விடுதிகளுக்கு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
09-01-1995.

(ஏ-4661)

---

### வெங்காயம் விலை அதிகரிப்பு

(அரியாலை)

வடபகுதியில் வெங்காயம் விலை அதிகரித்துள்ளது. 40 ரூபாய் விற்ற சின்ன வெங்காயம் தற்போது 70 ரூபாய் வரை விற்கப்படுகின்றது. இறக்குமதி செய்யப்பட்ட பம்பாய் வெங்காயம் கிலோ 80 ரூபாயாக விற்கப்படுகின்றது. -59

### கசிப்பு சிக்கியது

(ஆனைப்பந்தி)

ஒருவர் விற்பனைக்காகவைத்திருந்த கசிப்பு தமிழீழ காவல் துறையினரிடம் சிக்கியது.

யாழ். காவல்துறையினர் குருநகர்ப்பகுதியில் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையின்போது பதினொரு போத்தல் கசிப்பு கைப்பற்றப்பட்டது. --101

---

மகளிருக்கான

மனைப்பொருளியலும் கைத்திறனும்

## டிப்ளோமா பயிற்சிகள்

★ கேக் - ஐஸிங்
★ உடை தயாரித்தல் ★ உணவு தயாரித்தல்
★ பூவேலை ★ கைவேலை

புதிய கிழமை நாள் பயிற்சிகள் :
ஆரம்பம் : 16 - 1 - 95

புதிய சனி, ஞாயிறு பயிற்சிகள் :
ஆரம்பம் : 21 - 1 - 95

## கலாலயா

(தொழிற் பயிற்சியகம்)

விக்டோறியா வீதி,
(ஆஸ்பத்திரியின் பின் வீதி)
யாழ்ப்பாணம்.

(ஏ-4645)

---

## மோதல் தவிர்ப்புக்கு பத்திரிகைகள் வரவேற்பு

(கொழும்பு)

வடக்கு-கிழககில் நிரந்தர சமாதானம் ஏற்படுத்த அரசும், விடுதலைப்புலிகளும் மேற்கொண்டு வரும் முன் முயற்சிகள் குறித்து கொழும்பு பத்திரிகைள் முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டிருப்பதுடன் ஆசிரிய தலையங்கமும் தீட்டியுள்ளன.

இதுகுறித்து பிரபல சிங்கள பத்திரிகையான 'லக்திவ' கருத்து வெளியிடுகையில்,

தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் எனபதனை தென்பகுதி மக்கள் புரிந்து கொண்டிருப்பதாக தெரிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கு மக்களின் இதயங்களை வெல்ல முயசிகள் எடுக்கப்படவேண்டும் என 'சண்டேரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

பத்திரிகைகளின் இந்தப் போக்கு தற்போது தென்பகுதி மக்களின் உணர்வுகளை படம் பிடித்துக் காட்டியுள்ளதாக அரசியல் வல்லுநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். -க-சி

---

## சமய அறிவு பரீட்சையும் செயல்முறை போட்டியும்

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம் கடந்த 41 வருடங்களாகப் பாடசாலை மாணவர்களுக்கு இடையே சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு நடாத்திவரும் சைவசமய அறிவுப் பரீட்சையும், மாலை கட்டுதல், கோலம் போடுதல், தோரணம் பின்னுதல் என்பவற்றில் செயல்முறைப் போட்டியையும் இவ்வருடமும் நடாத்தவுள்ளது.

சைவசமய அறிவுப் பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி 12-ம், 14-ம் திகதிகளிலும், செயல்முறைப்போட்டி பெப்ரவரி 19-ம் திகதியும் நடத்தப்படவுள்ளது. பரீட்சையிலும் போட்டிகளிலும் முதல் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும். -ரி

---

### கண்காணிப்பு குழு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் தமது பிரதிநிதிகள் பற்றிய விபரங்களை, இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு வெளியிடுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. க-இ

### புலிகளின் பெயர்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளையில் கண்காணிப்புக்குழுவில் இடம்பெறும் வெளிநாட்டு பிரதிநிதிகள் நேற்று மாலை வரை யாழ்ப்பாணம் வந்து சேரவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது, க-இ

நல்லூர் இன்நூலகம்.

### மணிவாக்கு

தூய உள்ளம் படைத்தவர்களுக்கு இன்பம் என்றுமுண்டு. உள்ளத்தில் தூய்மை பெருதவனுடைய வாழ்நாள் வீணாகப் போய் விடும்.

- யோகிவேமனு

## நமது நோக்கு

### தியாகத்தின் மதிப்பு

''போராட்டத்தின் மூலம் புலிகள் தமது அதிகாரத்தை உறுதிப்படுத்தியுள்ளனர். சமஷ்டி மூலமாவது இதற்குத் தீர்வு காண வேண்டும்!'' எனப் பொதுசன ஐக்கிய முன்னணிப் பொதுச் செயலாளர் டீ. எம். ஜெயரத்ன பத்திரிகைப் பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இதில் - நாம் கவனிக்க வேண்டிய சில அம்சங்களைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

உலகில் - பல இடங்களில் மக்கள் நசுக்கப்படுவதை எதிர்த்துப் போராடி வருகின்றனர். அதிகாரத்தை வைததிருப்போர், அதனைக் கையளிக்க விரும்பாது அடக்கி ஒடுக்க முற்படுகின்றனர்.

பல வழிமுறைகளைக் கையாண்டு பல இனங்கள் வெற்றி கண்டிருப்பது வரலாறு. ஆனால், விரைவாக வெற்றி கண்டிட நிரந்தரத் தீர்வைக் கண்டிடச் சில இனங்கள் தமது உயிர்களையே பணயம் வைத்துப் போராடி வெற்றி காண்கின்றன.

அந்த வகையில் - எமது போராளிகள் இலட்சியத்தில் உறுதியாக நின்று போராடிச் செய்த தியாகத்தை பொதுசன முன்னணிச் செயலாளர் மதித்துக் கூறியது முக்கியத்துவமானது.

ஏனெனில் - தியாகத்தை மதிக்காத ஆட்சித் தலைவர்களாலும், பிரச்னையே இல்லை என அடித்துக் கூறிய தலைவர்களாலும், நாடு நலிந்ததே தவிர நன்மை எதுவும் கிடைக்கவில்லை.

அடுத்து - சமஷ்டி மூலமாவது தீர்வு காணவேண்டுமென அவர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

மாவட்டத்திற்கு மேல் செல்லமாட்டேன் என அடம்பிடித்த ஜே. ஆர்., போராட்ட வெப்பத்தைத் தாங்காது, மாகாண சபைக்கு இறங்கி வந்ததையும், தற்போது சமஷ்டிபற்றிப் பேசுவதையும் நாம் கவனிக்க வேண்டும்.

தீர்வு காண வேண்டிய வேளையில், போராளிகளின் தியாகத்தை எக்காரணம் கொண்டும் மறக்காது, அதற்கேற்ற வகையில் தீர்வுகளை ஏற்க வேண்டியது அவசியம்.

தியாகம் - பிறரால் மாத்திரமல்ல எம்மாலும் மதிக்கப்பட வேண்டிய தன் அவசியத்தையும் வலியுறுத்த விரும்புகிறோம்!

# யாழ். தமிழாராய்ச்சி மாநாட்டில் இடம்பெற்ற மறக்கமுடியாத சம்பவம்

[1974ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 4வது உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளான ஜனவரி 10ம் திகதி நடைபெற்ற படுகொலைகள் அசம்பாவிதங்களின் நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது]

தமிழாராய்ச்சி மாநாட்டுக்காக ஒன்பது பேர் இரத்தம் சிந்திய மண் யாழ்ப்பாணம். தமிழருக்கென்று ஒரு சயாதீன அமைப்பை கட்டி எழுப்ப வேண்டுமென்று தினம் தினம் இரத்தம் சிந்திகொண்டிருக்கும் மண் யாழ்ப்பாணம்

தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் பாடுபட்டு வரும் இந்தப் போராட்ட பூமியில் இருந்து தமிழ் நாட்டுக்கு தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு சென்ற எமது கல்விமான்களை ஆய்வாளர்களை மாநாட்டில் பங்குபற்றவிடாது கதவடைப்புச் செய்து திருப்பி அனுப்பப்பட்டுள்ள வேதனைமிக்க சம்பவமும் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இந்த நேரத்தில் 1974ம் ஆண்டு ஜனவரி பத்தாம் திகதி நடந்த சம்பவங்களை நாம் நினைவுகூர வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

யாழ். நகர் அன்று விழாக் கோலம் பூண்டிருந்தது. வீதிகள் வர்த்தக நிலையங்கள், எல்லாம் வாழை மரங்களாலும், தாழை மரங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மாலை வேளையானதும் பூமாதேவி போர்த்திருந்த கருமை நிற திரையை ஆயிரக்கணக்கான மின்சாரபல்புகளின்கண் சிமிட்டல்களால் யாழ்.நகர் இந்திரலோகம் மாதிரி எழில் கொண்டிருந்தது

யாழ். திறந்த வெளி அரங்கில் மாநாடு நடப்பதற்கு அனுமதி வழங்காததால் வீரசிங்கம் மண்டபத்திற்குள் நடாத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மண்டபமும் நிரம்பி வழிந்தது. கதவுகள் பூட்டப்பட்டு பேச்சாளர்கள் பேச ஆரம்பித்ததும், வெளியில் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் மண்டபத்தை நோக்கிச் சென்று தங்களையும் உள்ளே செல்ல அனுமதிக்குமாறு கேட்டனர். இதனால் விழாவை மண்டபத்திறகு வெளியில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இறுதிநாள் விழா கோலகலமாக நடந்து கொண்டிருந்த வேளை மேற்குப் பக்கமாக தபாற்கந்தோர் பக்கமாக சிறு சலசலப்பு. மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த போக்குவரத்து பொலிஸ்இன்ஸ்பெக்டர். வழியெல்லாம் திரண்டிருந்த மக்களினால் தொடர்ந்து பிரயாணத்தை மேற்கொள்ளமுடியாது வந்த வழியே திரும்பிச் செல்கின்றார். கால் மணி நேரத்துக்குப் பின் இன்ஸ்பெக்டர் சந்திரசேகர மைதானத்துக்கு வந்தார். அதன் பின் கூட்டத்தில் பலத்த பதற்றம் ஏற்பட்டது.

திடீரென கோட்டை அகழிக்கருகில் கண்ணீர்ப் புகைக் குண்டு ஒன்றுவெடித்தது. மக்கள் அழுது குளறியவண்ணம் கால்போன போக்கில் ஓடத் தொடங்கினர். தொடர்ந்தும் வெடிச்சத்தங்கள், தடியடிப் பிரயோகம் ஜன சமுத்திரத்தின் மத்தியில் 'ஐயோ, அம்மா என்ற கூக்குரல்கள் அவலக் குரல்கள்.

மாநாட்டுக்கு வந்திருந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தொண்டர்களின் உதவியுடன் வெளியேறிக்கொண்டுருந்தார்கள். பலர் வீரசிங்கம் மண்டபம், தபாற்கந்தோர் ஆகியவற்றின் வடக்குப்பக்கமாக உள்ள மதில் சுவர்களினால் ஏறிக்குதித்து தப்பி ஓடினர்கள். பஸ்நிலையத்திலும் பொலிசாரால் மக்கள் தாக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தினால் ஒன்பது அப்பாவிகள் துடிதுடித்துப்பலியானார்கள். ஆசிரியர் ஒருவர் அதிர்ச்சியினால் பூங்காவுக்கருகில் சுருண்டு விழுந்து பலியானர். பலர் காயமடைந்தனர். எங்குமே பெரும் பதற்றம்.

அன்றிரவு 9 மணிக்குப் பின்னர் யாழ். நகர்வெறிச்சோடிக் கிடந்தது. ஆங்காங்கே பொலிசார் மட்டுமே வீதிகளில் நடமாடினார்கள்.

வீடு செல்ல போக்குவரத்து வசதியின்றி விழாவுக்கு வந்திருந்த மக்கள் ஆங்காங்கே அன்றிரவைக் கழித்தார்கள்.

ஏன், எதற்கு இப்படி நடந்ததென்று எவருக்குமே தெரியாத நிலையில் அப்போதைய அரசு இந்த கொடூரத்தை திட்டமிட்டு நடத்தியது.

இச்சம்பவத்தில் சி. நந்தகுமார் (14 வயது) சுழிபுரம், வி. தேவராசா (75 வயது) தொல்புரம், ஆர். சிவானந்தன் (10 வயது) நாச்சிமார் கோவிலடி, தேவரத்தினம் (27 வயது) நாயன்மார்கட்டு. வீ. யோகநாதன் (20 வயது), கொடிகாமம், எஸ். பொன்னுத்துரை (54 வயது) கோப்பாய், ஆறுமுகம் (60 வயது) நாயன்மார்கட்டு, சி. சரவணபவன் பருத்தித்துறை ஆகியோர் உயிரிழந்தனர். முதல் நாள் நடந்த அலங்காரப் பவனியின்போது இருவர் உயிரிழந்தனர்; இந்தச் சம்பவத்தில் 30 பேர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். மாநாட்டு அழைப்புக்குழுத்தலைவர் டாக்டர் கோபாலபிள்ளை மகாதேவா கூட பாதிப்புக்குள்ளானர்.

மனங்களிலிருந்துவிரைவாக மறக்கமுடியாதிருக்கும் அந்தச் சம்பவத்தோடு, தஞ்சாவூரில் அண்மையில் நடந்த 8-வது தமிழாராய்ச்சி மாநாட்டில் எம்மவர்கள் புறக்கணிக்கப்பட்டு திருப்பி அனுப்பியதும், மறக்கமுடியாத மற்றொரு நிகழ்வாகும்.

- மகரம்

## பலதும் பத்தும்

### அந்த நாடகம்!

காட்சி-1: பிறிமா தொழிலாளர் வேலைநிறுத்தச் சம்பவங்களுக்குக் காரணமான ஐ. தே. க. எம். பி.யும் தொழிற்சங்கத் தலைவருமான சேனரத்தினவிற்கு ''வாக்குமூலம் பதிய வேண்டும்; வருக!'' என சி. ஐ. டி. தொலைபேசிமூலம் அழைப்பு. முன்னாள் சபாநாயகர் மொஹமட்டுடன் தொடர்பு கொள்ள, ''போக வேண்டாம்!'' என்கிறார். பரபரப்பு ஆரம்பம்!

காட்சி - 2: மொஹம்மது தற்போதைய சபாநாயகர் இரத்தினயக்காவோடு தொடர்பு கொள்ள ''வாக்குமூலம் பெற அனுமதிப்பேன்!'' பரபரப்பு அதிகரிப்பு.

காட்சி - 3: சேனரத்தின பாதுகாப்புச் செயலாளர் ஹமில்டனுடன் தொடர்பு கொள்ள, ''வீட்டுக்கு வந்தால் வாக்குமூலம் கொடுக்கவும்!'' என ஆலோசனை.

காட்சி- 4: சேனரத்தின - சி. ஐ. டி.யோடு தொடர்பு கொள்ள, ''அஞ்சேல், வருக!'' என்றபின் அங்கு செல்கிறார்!

—மயூரன்

## இராசி பலன்

10–1–1995

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு மார்கழி 26)

நவமி பி. ப. 3-49 வரை, அச்சுவினி பி. ப. 2-44 வரை, அமிர்த சித்தயோகம், இராகு காலம் மாலை 3-33 முதல் 5-03 வரை, சுபநேரம் காலை 11-03 முதல் 12-33 வரை,

மேஷம்: நிலைமாற்றம் பண வருவாய், காரியசித்தி.

இடபம்: கடன் படல், அமைதிக் குறைவு, சயன சுகமின்மை.

மிதுனம்: உற்சாக மேலீடு, தாயார் உதவி, பயண நன்மை.

கடகம்: ஜீவனசுகம், இன சன கலகலப்பு, தெய்வீக செலவு,

சிங்கம்: மனக்கிலேசம், ஏமாற்றப்படல், அலைச்சல்.

கன்னி: கெட்ட சகவாசம், விரோத சிந்தனை, காரிய தடை,

துலாம்: தியான நிலை, குடும்பமதிப்பு, சகோதரநினைவு

விருச்சிகம்: மனமாற்றம் குடும்ப பிரிவு, யோசனை.

தனுசு: தப்பபிப் பிராயம் நீங்குதல், கலந்துரையாடல் மகிழ்ச்சி.

மகரம்: விரோதிகள் பயம், அகால உணவு, குழப்பம்.

கும்பம்: மன நிறைவு, தொழில் சிறப்பு, உல்லாசம்.

மீனம்: அகங்காரவார்த்தை அடிமைநிலை, அபிப்பிராய பேதம்.

ஜோஸ்யர்

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995– 01– 10

செவ்வாய் இரவு

08-01 - சிறப்பு நிகழ்ச்சி நெடுஞ்செழியன் எழுதிய ''தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை''
08-20 - ஏர்முனை ''உருளைக் கிழங்கில் உச்சவிளைச்சல்'' சித்திரம்
08-30 - செய்திகள்
08-40 - அறிந்து கொள்ளுங்கள் - தகவற்களஞ்சியம்
08-50 - மலரும் மொட்டுக்கள்
09-00 - இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

1995– 01– 11

புதன் காலை

07-02 - மாவீரவணக்கம்
07-15 - மணியாரம்
07-30 - செய்திகள்
07-35 - பத்திரிகைச் செய்திகள்
07-40 - தாயகப் பாடல்கள்
08-00 - காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995-01–10

செவ்வாய் மாலை

05-01 - சிந்தனைச் சிதறல்
05-02 - எழுச்சிகீதம்
05-10 - புதியவை
05-15 - தமிழிசை
05-30 - வானொலி மதியூகம்2
06-00 - சிந்தனைக்குச் சில விஞடிகள்
06-02 - இவ்வாரம் இவர் - நிகழ்ச்சியில் விளையாட்டு வீரர் திரு. சண்முகலிங்கம் அவர்களுடனை செவ்வி.
06-15 - விளையாட்டுச் செய்திகள்
06-20 - என்தெரிவு
06-30 - மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

உற்பத்தியைப் பெருக்குவோம்
ஊக்கமாய் உழைத்திடுவோம்

வெளிநாட்டு முதலீட்டாளர்கள்

# இலங்கை வருவதில் ஆர்வம் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் ஏற்பட்டதையடுத்து வெளிநாட்டு முதலீட்டு நிறுவனங்கள் பல இலங்கையில் முதலீடுசெய்ய ஆர்வம் கொண்டிருப்பதாககொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன

இலங்கையில் வடக்கு கிழக்கில் இடம்பெறும் யுத்தம் தலைநகரையும்பெருமளவில் பாதிப்பதால் வெளிநாட்டவர்கள் இலங்கையில் தமது முதலீடுகளை மேற்கொள்ள தயக்கம் தெரிவித்துவந்தனர். நாட்டில் உறுதியான ஸ்திரத்தன்மை ஏற்பட்டாலன்றி தாங்கள் முதலீடுகளை செய்ய முன்வரப் போவதில்லை என பல வெளிநாட்டு நிறுவனங்கள் கூறியிருந்தன.

தற்போது அமுலுக்கு வந்துள்ள மோதல் தவிர்ப்பு உடன்பாடானது வெற்றியளிக்குமென எதிர்பார்க்கப்படுவதால் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் வருகைஅதிகரிக்குமென அரசு எதிர்பார்க்கிறது. நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு பெருமளவிலான வெளிநாட்டு முதலீட்டையே நம்பியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. சி-க)

### மீள்பரீட்சை

(கொழும்புத்துறை)

கடந்த 1994ஆம் ஆண்டு நூலகவியல் தகவல் விஞ்ஞானம் முதல் நிலைப்பரீட்சைக்குத் தோற்றி சித்தியெய்யாத மாணவர்களுக்கான மீள் பரீட்சை 1995 மே மாதம் நடைபெறும் என நூலகச் சங்கத்தின்யாழ்-மாவட்ட இணைப்பாளர் திரு. எஸ். மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார்.

154

### விபத்தில் காயம்

(மானிப்பாய்)

புத்தாண்டு தினத்தன்று கொழும்பு பெரியாஸ்பத்திரியில் 435 பேர் வீதி விபத்துக்களினுலும் பட்டாசு வெடி விபத்துக்களினுலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பட்டாசு வெடித்ததினுல் ஏற்பட்ட விபத்தே அதிகமாகும். இவ்வருடம் என்றுமில்லாதவாறு வாணவேடிக்கைகளினுல் பல கடைகள் எரிந்து நாசமகியுள்ளன.

-71

# கிழக்கில் ஆயுதங்களுடன் நடமாடும் புலிகள்மீது எதிர் நடவடிக்கை எடுக்கவேண்டாம்என உத்தரவு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் ஆயுதங்களுடன் நடமாடும் விடுதலைப்புலிகளைக் கைதுசெய்ய வேண்டாமென்றும் எதிர்நடவடிக்கை எடுக்க வேண்டாமெனவும் பொலிஸ் மா அதிபர் பிரங்க் டி சில்வா அறிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ்மா அதிபர் சுற்றுநிருபம் ஒன்றின் மூலம் மேற்படி கட்டளையைப் பிறப்பித்துள்ளார்.

ஆயுதமேந்தி நடமாடும் விடுதலைப்புலிப் போராளிகளை, கைது செய்வதிலோ அல்லது வேறு எதிர் நடவடிக்கையோ எடுக்கவேண்டாமென்று அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் மா அதிபர் அனுப்பிய சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. வி-இ

# யாழ். செயலகத்துக்கு நேரடி தொலைபேசி வசதி

(கொழும்பு)

யாழ்ப்பாண அரச அதிபர் செயலகத்திற்கும், ஊர்காவற்றுறைப் பிரதேசச் செயலகத்திற்கும் கொழும்பிலிருந்து நேரடித் தொலைபேசி வசதி விரைவில் வழங்கப்படவுள்ளது.

இவ்வசதி வழங்கப்பட்டதும் கொழும்பிலிருந்து நேரடியான பணிப்புரைகள் உடனுக்குடன் யாழ். செயலகத்திற்கு வழங்கக் கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. க-இ

# செயலகத்துக்கு வானொலி தொலைபேசிவசதி கிடைத்தது!

## நேற்று பரீட்சார்த்தமாக இயங்கியது!!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டச்செயலகத்துக்கு வானொலி தொலைத் தொடர்புக் கருவி ஒன்று நேற்று பொருத்தப்பட்டது. அவசர தேவைகளுக்கென கொழும்புடன் தொடர்பு கொள்ளும் நோக்குடன் இத்தொலைத் தொடர்பு சாதனம் பொருத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தொலைத் தொடர்புத் திணைக்களத் தலைமைச் செயலகத்துடன் அண்மையில் தொடர்புகொண்டு விடுக்கப்பட்ட வேண்டுகோளைத் தொடர்ந்து இத்தொலைத் தொடர்புச் சேவை செயலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு தொலைத் தொடர்பு திணைக்கள தலைமைச் செயலகத்தின் பணிப்பைத் தொடர்ந்து வவுனியா தொலைத் தொடர்புத் திணைக்களத்தில் பணிபுரியும் மூன்று பொறியியலாளர்கள் நேற்று முன்தினம் இத்தொடர்பு சாதனங்களுடன் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

யாழ் செயலகத்தில் நேற்றுக் காலை இத்தொலைத் தொடர்புச் சாதனம் பொருத்தப்பட்டு கொழும்புக்கான தொடர்புச் சேவை பரீச்சார்த்தமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. (162-71-இ)

# இராணுவ சோதனையில் மாற்றமில்லை!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும், அரசுத் தரப்பினருக்குமிடையில் மோதல் தவிர்ப்பு உடன்பாடு ஏற்பட்டாலும்கூட இராணுவத்தின் சோதனை நடவடிக்கைகள் வழமைபோல் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தாண்டிக்குளம் மற்றும் இராணுவச் சோதனை நிலையங்களில் பயணிகள் வாகனங்களிலிருந்து இறக்கப்படுவதுடன், அவர்களின் உடைமைகள் படையினரால் சோதனையிடப்படுவதாகவும் பயணிகள் தெரிவித்துள்ளனர். க-இ

# லயனல் பெர்ணண்டோ இராஜினமா

(கொழும்பு)

வெகுஜன தொடர்பு சுற்றுலா விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் லயனல் பெர்ணண்டோ நேற்று தமது பதவியை ராஜினமா செய்தார்.

மேற்படி அமைச்சின் பதில் செயலாளராக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தலைவர் டபிள்யு பி. எஸ். ஜயவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு லயனல் பெர்ணண்டோ லேக்ஹவுஸ் நிறுவன தலைவர் பதவியிலிருந்தும் இராஜினமாச் செய்ததையடுத்து அசோசியேற்றட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டெட் ஸ்தாபனத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஜெயவர்த்தன லேக் ஹவுஸின் பதில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. லயனல் பெர்ணண்டோவின் இராஜினமாவுக்கான காரணம் குறித்து இதுவரையில் எதுவித தகவலும் தெரிவிக்கப்படவில்லை. (க-இ)

# போர் இடைநிறுத்தம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் அன்பார்ந்த தமிழீழ மக்களாகிய நீங்கள் அறிவீர்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல்துறை விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

சிறிலங்காப் படைகளின் போர் நடவடிக்கைகளினால், சொந்த இருப்பிடங்களையும், சொத்துக்களையும், தொழில் நிலைகளையும் இழந்து, துன்ப துயரங்களுக்கு முகம் கொடுத்துப் பெரும் வாழ்க்கைச் சுமையைத் தாங்கி, எமது போராட்டத்திற்கு உரம் சேர்த்து வாழ்ந்துகொண்டிருந்த எமது மக்கள், இக்காலத்தில் இராணுவப் பிரதேசத்தை அண்டியுள்ள தமது வாழ்விடங்களைப் பார்ப்பதற்கும், இராணுவம்-கடற்படை முகாம்களை அண்டியுள்ள கடல் பிரதேசங்களில் மீன் பிடிக்க விருப்புவதும் இயல்பானது என்பதனை நாம் அறிவோம்.

ஆனால், போர் இடைநிறுத்தப் பிரகடனத்தில் உள்ள நடைமுறை விதிகளின் இரண்டாவது சரத்தில் உள்ள சிறிலங்காப் படையினரும், தமிழீழ விடுதலைப் புலிகளும், தமக்கு மத்தியில் 600 மீற்றர் இடைவெளியில் தற்போதைய நிலைகளில் தரித்து இருப்பர் என்பதுடன், இந்த இடைவெளியில் எவரும் நடமாடுவது தடை செய்யப்பட்டுள்ளது. தடை செய்யப்பட்ட பிரதேசத்தில் அத்துமீறிப் பிரவேசிப்பதுகூடப் போர் நடவடிக்கையாகக் கருதப்படும்.

இதன்படி விடுதலைப் புலிகளாகிய நாம் இந்நடைமுறை விதிகளைக் கடைப்பிடிப்பதில் கவனமாகச் செயற்பட்டு வருகின்றோம்.

மேலும் இப்பிரதேசத்தில் இரு பகுதியினராலும் கண்ணிவெடிகள், பொறி வெடிகள் என்பன ஏற்கனவே புதைக்கப்பட்டு அகற்றப்படாத நிலையில் உள்ளது.

இவ்வேளையில் இராணுவ கடற்படை முகாம்களை அண்டியுள்ள இத்தடை செய்யப்பட்ட 600 மீட்டர் பிரதேசத்திற்குள் எமது மக்கள் சிலர் மீறிப் பிரவேசித்ததாகவும், தொழில் செய்ய முனைந்ததாகவும் சிறிலங்காப் படையினர் சுட்டிக்காட்டியதுடன், போர் இடை நிறுத்தத்தை மீறும் செயல் எனவும் தெரிவித்துள்ளனர்.

எனவே, எமது மக்கள் இன்று ஏற்பட்டுள்ள போர் இடை நிறுத்தத்தை நேர்மை நியாயத்துடன் கடைப்பிடித்தும் தொடர்ந்து பேணுவதற்கு எமக்கு ஒத்துழைப்பதுடன் கண்ணிவெடிகள், பொறிவெடிகள், இராணுவ நடவடிக்கையினால் ஏற்படுத்தப்படும் காயமுறுதலையும், உயிரிழப்புகளையும் தவிர்க்கும் முகமாக இத்தடை செய்யப்பட்ட பிரதேசத்திற்குள் எக்காரணம் கொண்டும் நடமாட வேண்டாம் எனக் கேட்டுக் கொள்வதுடன் எமது உறுப்பினர்களின் அறிவுறுத்தல், ஆலோசனைகளின்படி செயற்பட்டுதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். அத்துடன் ஸ்ரீலங்காப் படையினரின் நிலைகளுக்கு அண்மையில் சொத்துக்களை பார்வையிடச் செல்லும் மக்கள் அது தொடர்பாக அப்பிரதேச அரசியல் பொறுப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

மேலும் ஸ்ரீலங்காப்படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம் பெறும் பேச்சுக்களில் இது தொடர்பான முடிவுகள் எடுக்கப்படும். இதன் பின்னர் பொது மக்கள் தமது சொத்துக்களை பார்வையிடச் செல்வதற்கான அனுமதி எம்மால் வழங்கப்படும்.

எமது அனுமதி கிடைக்கும் வரை மக்கள் எவரும் குறித்த பகுதிக்குள் பிரவேசிக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொள்வதுடன் விடுதலைப்புலிகள் உறுப்பினர்களின் ஆலோசனைப்படி கேட்டு செயற்படும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்றும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ]

# பென்ஷன் வவுச்சர்

]மானிப்பாய்]

யாழ் மாவட்ட உள்ளூராட்சித் திணைக்கள ஊழியர்களினதும்ரயில்வே திணைக்கள ஊழியர்களினதும் டிசம்பர் மாதத்திற்குரிய பென்ஷன் வவுச்சர்களும் காசோலைகளும் யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவினால் உரியவர்களுக்கு நேற்றுஅனுப்பி வைக்கப்பட்டது.

# மன்னார் கண்காணிப்புக் குழு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் மோதல் கண்காணிப்புக் குழுவில், அரசு சார்பில் மன்னார் மாவட்டக் கோட்டக் குரு முதல்வர் ஜே.பி.தேவராஜும் சட்டத்தரணி நயூசீனும் இடம் பெறுகின்றனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் இடம்பெறும் இரு பிரதிநிதிகள் பற்றிய விபரம் இதுவரை வெளியிடப்படவில்லை. க-இ

## வடக்கு கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அமுலில் இருந்துவரும் மீன்பிடி தடைசட்டத்தை உடனடியாக நீக்குவதற்கு அரசுமுடிவு செய்துள்ளது என இலங்கை வானொலி அதன் இரவு செய்தி அறிக்கையில் தெரிவித்தது.

இதன்படி இதுவரை அமுலில் இருந்து வந்த கடல் வலயத்தடைச்சட்டம் ஓரளவு தளர்த்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மீன்பிடி தடைச்சட்டத்தை நீக்குவதற்கு ஏதுவாக அவசரகாலச் சட்ட விதிகள் திருத்தி அமைக்கப்படவுள்ளதாகவும் அரசு அறிவித்தது.

இந்தப் பகுதிகளில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் ராணுவ கடற்படை முகாம்களைக் குறிப்பிட்ட அளவு தவிர்த்து மீன்பிடித்தொழிலில்ஈடுபடுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. [வி-இ)

★ பயங்கரவாத தடைச் சட்டம்:

# தடுத்துவைக்கப்பட்டுள்ள 181 பேர் விடுதலையவர்

[கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் அவசர காலச் சட்டம் ஆகியவற்றின் கீழ் சிறைகளிலும், முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டோரில் 181 பேரை விடுதலை செய்யுமாறு ஜே. எஸ். சோஸா தலைமையிலான குழு பாதுகாப்பு அமைச்சுக்கு சிபார்சு செய்துள்ளது.

ஓய்வுபெற்ற நீதிபதி ஜே. எஸ். சோஸா தலைமையிலான 5 பேர் கொண்ட குழு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்ட 632 பேரை விசாரணை செய்த பின் மேற்கண்ட 181 பேரையும் விடுதலை செய்யுமாறு சிபார்சு செய்துள்ளது.

இக்குழுவின் இறுதி அறிக்கை நீதி மற்றும் அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸிடம் நேற்று சமர்ப்பிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. [க-இ)

## கடற்றொழிலாளர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்த ஒழுங்கு விதிகளை மீறியதாகவும், இராணுவப் பிரதேசங்கள், நிலைகளுக்கு மிகவும் அண்மையாகச் சென்றதாகவும் இராணுவத்தினரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நேற்று இராணுவப் பிரதேங்களுக்குச் சென்ற ஆறு மீனவர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியற்துறையினர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இச்செயற்பாடுகள் தாக்குதல நடவடிக்கை ஒழுங்கு விதிகளை மீறும் பாரதூரமான செயற்பாடுகளாகும். ஆகவே எமது அன்பான மக்களே நீங்கள் இவ்ஒழுங்கு விதிகளை மீறுவதால் இப்பிரதேசங்களில் மீன்பிடிக்கும் செயற்பாடுகளை முழுமையாக நிறுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்படலாம்.

ஆகவே முகாம், இராணுவப் பிரதேசங்களின் கரைப் பகுதிகளில் இருந்து 600 மீற்றர் பிரதேசம் எவரும் நடமாடாத பிரதேசங்கள் என்பதைக் கவனத்தில் கொண்டு உங்கள் செயற்பாடுகளைச் செயற்படுத்தவும்.

இவ்வொழுங்கு விதிகளை மீறும் ஒரு சில மீனவர்களால் ஒட்டு மொத்தமாக இப்பிரதேசத்தின் மீனவத் தொழிலில் ஈடுபடும் எமது மக்கள் பாதிப்படையும் நிலை ஏற்படலாம். ஆகவே இப்பிரதேச மீனவர் கூட்டுறவுச்சங்கங்கள் இவ்வொழுங்கு விதிகளை தொழிலில் ஈடுபடும் மக்களுக்கு அறிவுறுத்தி நடைமுறைப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகள்-படையினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரு தரப்பினரிடையேயும் பரஸ்பர நல்லுறவை ஏற்படுத்தும் முகமாக இரு தரப்பினரும் நேரடியாக பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளனராம்.

ஆனால் இந்தப் பேச்சுவார்த்தை எங்கே, எப்போது மேற்கொள்ளப்படவுள்ளது என்பது பற்றிய தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (க-இ)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு ஜனவரி மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-